வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.1982/ஆ2/2026 நாள்: .08.2026

பொருள்: பள்ளிக் கல்வி-வேலூர் மாவட்டம்- உடற்கல்வி- 2026-2027 ஆம் கல்வியாண்டில் மாநில அளவிலான U14/17/19 வயதிற்குட்பட்ட மாணவ/மாணவிகளுக்கான பாரதியார் தின/குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள்-நடைபெறும் இடம் தேதி போன்ற விவரங்கள் தெரிவித்தல்-சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.018655/எம்2/இ2/2025 நாள்: 02.07.2025.
2. இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.2322/ஆ2/2025 நாள்: 08.07.2025.
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.031407/எம்2/இ2/2026 நாள்: 21.07.2026.
4. எழும்பூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.6414/ஆ4/2026 நாள்: 10.08.2026.

-----

பார்வை(3)&(4)-இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் மற்றும் எழும்பூர் முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு 2026-2027-ஆம் கல்வியாண்டிற்கான மாநில அளவிலான U14/17/19 வயதிற்குட்பட்ட மாணவ/மாணவிகளுக்கான பாரதியார் தின/குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் கீழ்காணும் அட்டவணையின்படி நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| போட்டி நடைபெறும் இடம்/மாவட்டம் | போட்டி | பிரிவு | போட்டி நடைபெறும் நாள் |
|---|---|---|---|
| ஒலிம்பிக் அகாடமி உள்ளரங்கம், பெரியமேடு, சென்னை. | வாள்சண்டை | மாணவிகள் U14/17/19 | 08.09.2026 முதல் 09.09.2026 வரை |
| | | மாணவர்கள் U14/17/19 | 10.09.2026 முதல் 11.09.2026 வரை |

எனவே, வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்று, மாநில அளவிலான போட்டிகளில் பங்குபெறவுள்ள மாணவ/மாணவியர்களை பார்வை(1)-இல் தெரிவிக்கப்பட்டுள்ள இயக்குநரின் (SOP) நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி உரிய நேரத்தில் பாதுகாப்பான முறையில் எவ்வித புகாருக்கும் இடம் அளிக்கா வண்ணம் பங்குபெறச் செய்யுமாறு அணிமேலாளர்களுக்கு அறிவுறுத்திட சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர் /முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு:**
1. மாணவ/மாணவியர்களின் பெயர் பட்டியல்.
2. நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்- SOP.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்

சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள்.
வேலூர் மாவட்டம்.

நகல்
1. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்.
(இடைநிலை/தொடக்கக் கல்வி/தனியார் பள்ளிகள்)
தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர் மாவட்டம்.

Scanned with OKEN Scanner